**செ. கு. எண்: 071** **நாள்: 17.07.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்
இரங்கல் செய்தி – 17.7.2019

பிரபல தமிழ் திரைப்பட நடிகர் திரு. விவேக் அவர்களின் அன்பு தாயார் திருமதி மணியம்மாள் அவர்கள் இன்று (17.7.2019) அதிகாலை உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

திருமதி மணியம்மாள் அவர்கள், திரு. விவேக் அவர்களுக்கு நல்லதொரு தாயாகவும், பக்கபலமாகவும் திகழ்ந்தவர். திருமதி மணியம்மாள் அவர்களின் மறைவு, அவருடைய குடும்பத்தினர் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

அன்னாரை இழந்து வாடும் திரு. விவேக் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**